# நாட்டிற்கே வழிகாட்டும் தமிழ்நாடு!

## முதல் பக்கத் தொடர்ச்சி

அளவில் கனமழை முதல் அதி கன மழை தொடர்ந்து பெய்ததால், பல பகுதிகளை வெள்ளம் சூழ்ந்தது.

மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட சேதங்களுக்கு நிவாரணம் மற்றும் சீரமைப்புப் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் 16.12.2023 முதல் 18.12.2023 வரை பரவலாக

கனமழை முதல் அதிகன மழைப்பொழிவு ஏற்பட்டது. வழக்கத்திற்கு மாறான கனமழை மற்றும் அதனை தொடர்ந்த வெள்ளம் காரணமாக மனித உயிரிழப்புகள், கால்நடை இறப்பு ஆகியவை ஏற்பட்டதோடு, வீடுகள்/குடிசைகள், வேளாண் தோட்டக்கலை பயிர்கள், சாலைகள், பாலங்கள், மின்சாரம், குடிநீர் வழங்கல் போன்ற பொது உட்கட்டமைப்புகளுக்கும் பெருத்த சேதங்கள் ஏற்பட்டன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாத்திட மிக்ஜாம் புயல் மற்றும் தென் மாவட்டங்களில் ஏற்பட்ட கனமழை மற்றும் பெரு வெள்ளம் ஆகியவற்றிற்கு ரூ.2476.89 கோடி மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்கினார்கள்."

மிக்ஜாம் புயல் பாதிக்கப்பட்ட 29,54,269 குடும்பங்களுக்கு, குடும்பம் ஒன்றிற்கு ரூ.6,000/வீதம் வாழ்வாதார நிவாரணம் ரூ.14.86 கோடியும்; மிக்ஜாம் புயல் நிவாரணம் கோரி வரப்பெற்ற விண்ணப்பங்களுள் தகுதியான 2,68,869 குடும்பங்களுக்கு, குடும்பம் ஒன்றிற்கு ரூ.6000/ வீதம் ரூ.39.51 கோடி வாழ்வாதார நிவாரணமாகவும்; மிக்ஜாம் புயல் வெள்ளம் காரணமாக எண்ணூர் பகுதியில் எண்ணெய் கசிவால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ரூ.1.15கோடியும்; மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு ரூ.48.18 கோடியும் நிவாரணமாக உடனுக்குடன் வழங்கினார்கள்.

### தென் மாவட்டங்களில் வெள்ள நிவாரணம்

தூத்துக்குடி, நெல்லை, தென்காசி, கன்னியாகுமரி ஆகிய தென் மாவட்டங்களில் பெய்த கனமழை மற்றும் பெருவெள்ளத்தால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட 6,63,760 குடும்பங்களுக்கு குடும்பம் ஒன்றிற்கு ரூ.6000/- மிதமாக பாதிக்கப்பட்ட 14,31,164 குடும்பங்களுக்கு குடும்பம் ஒன்றிற்கு ரூ.1,000/- வீதம் ரூ.541.37 கோடி வாழ்வாதார நிவாரணமாக வழங்கினார்கள்.

தென் மாவட்டங்களில் ஏற்பட்ட கனமழையின் காரணமாக பாதிக்கப்பட்ட வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கான நிவாரணமாக ரூ.201.67 கோடியும்;

மிக்ஜாம் புயல் மற்றும் தென் மாவட்டங்களில் ஏற்பட்ட கனமழையின் காரணமாக பல்வேறு துறைகளின் உட்கட்டமைப்புகளுக்கு ஏற்பட்ட சேதங்களைச் சீரமைக்க ரூ.130 கோடியும் ;

மிக்ஜாம் புயல் மற்றும் தென் மாவட்டங்களில் ஏற்பட்ட கனமழையின் காரணமாக மீன் பிடி படகுகள், வலைகள் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணமாக ரூ.28.10 கோடியும் வழங்கி பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்களை துடைப்பதில் முதலமைச்சர் அவர்கள் வெகு வேகமாக உடனுக்குடன் செயல்பட்டு அதிகாரிகளை அரவணைத்து களத்தில் தாமும் நின்று ஆற்றிய பணிகளை பாதிப்புக்காளான மக்களும் நடுநிலையாளர்களும் பத்திரிகையாளர்களும் வெகுவாகப் பாராட்டினர்.

### நில அளவைத் துறை:

பதிவுத்துறையில் சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டவுடன் அவற்றில் 2 ஏக்கர், 3 ஏக்கர் நிலங்கள் ஒருவருக்கே இருந்தால், அவருக்கு உடனடியாக பட்டா மாற்றிக் கொடுக்கப்படுகின்றன. உரிய முறையில் இணையத்திலும் பதிவு செய்து கொடுக்கப்படுகின்றன. ஒருவர் இரண்டு ஏக்கருக்கு மேல் நிலம் வாங்கி விற்பனைக்காக மாவட்ட நிர்வாகத்தின் அனுமதியுடன் மனைகள் போட்டிருந்தால் விற்பனை செய்யப்படும் மனைகளைப் பதிவு செய்யும்போது மனை வாரியாகப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. முன்பு ஒரு மனை வாங்கினால் துறை அதிகாரி அந்த இடத்திற்குச் சென்று அளந்து கொடுக்க வேண்டும். தற்போது அந்த நடைமுறை எளிமைப் படுத்தப்பட்டுள்ளது. இது போன்று அனைத்துப் பணிகளையும் எந்தெந்த முறையில் எளிதாக்க இயலுமோ அந்தந்த முறைகளில் துறையை எளிமைப்படுத்தி மக்களுக்கு நன்மை செய்யும் துறையாக முதலமைச்சர் அவர்கள் வருவாய்த் துறையை மேம்படுத்தியுள்ளார்கள் என்பது பெருமைக்குரிய சாதனைகளில் ஒன்றாகும்.

இப்படி, முதலமைச்சர் திராவிட நாயகர் ஆட்சி ஏற்பட்ட மூன்று ஆண்டுகளில் வருவாய்த் துறை தமிழ்நாடு முதலமைச்சர் உருவாக்கிய உங்கள் தொகுதியில் முதலமைச்சர், முதலமைச்சரின் முகவரித் துறை, கள ஆய்வில் முதலமைச்சர், மக்களுடன் முதல்வர், நீங்கள் நலமா முதலான பல புதுமையான திட்டங்களால் மக்கள் குறைகள் மனு வழங்கிய 15 நாள்களில் தீர்க்கப்படுகின்றன. மக்கள், திராவிட மாடல் அரசைப் பாராட்டுகின்றனர். மற்ற மாநிலங்களுக்கும் திராவிட மாடல் அரசின் வருவாய்த் துறை சீரிய முறையில் வழிகாட்டுகிறது.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டள்ளது.

---

காவிரி நடுவர் மன்றம், உச்சநீதிமன்றம் தீர்ப்புகளுக்கு எதிராக கருநாடக அரசு தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் தர மறுப்பதா?

# தஞ்சையில் திராவிடர் கழகம் சார்பில் அனைத்துக் கட்சி கண்டன ஆர்ப்பாட்டம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

*சென்னை, ஜூலை 18 -*

*காவிரி நடுவர் மன்றம், உச்சநீதிமன்றம் தீர்ப்பு களுக்கு எதிராக கருநாடக அரசு தமிழ்நாட்டுக்குத் தண்ணீர் தர மறுப்பதா? எனவும் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் கூடிய அனைத்துக் கட்சிக் கூட்ட தீர்மானங்கள் மிகச் சரியானவை மட்டுமல்ல, தேவையானவையும் கூட எனவும் இதைக் கண்டித்து வரும் 23 ஆம் தேதி மாலை தஞ்சையில் திராவிடர் கழகம் நடத்தும் அனைத்துக் கட்சி கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு தாரீர் எனவும் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

*இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-*

*காவிரி நடுவர் மன்றம், உச்சநீதிமன்றத் தீர்ப்பு களுக்கு எதிராக, கருநாடக மாநில அரசு - தமிழ்நாட்டுக்குச் சட்டப்படி தரவேண்டிய காவிரி நீரைத் தர மறுப்பது சட்டப்படியும், நியாயப்படியும் சரியானதல்ல. தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் கூடிய சட்டமன்றக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மூன்று தீர்மானங்களும் முத்தானவை. தமிழ்நாட்டு மக்கள் உணர்வை வெளிப்படுத்த வரும் 23 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை தஞ்சாவூரில் திராவிடர் கழகத்தின் சார்பில் நடத்தப்பட விருக்கும் அனைத்துக் கட்சி கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு கோரி திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*காவிரி நதிநீர் பங்கீடு பிரச்சினையில், தமிழ்நாட்டின் உரிமைகளைப் பாதுகாத்திடும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்க ளது தலைமையில் நேற்று (16.7.2024) சட்டமன்ற கட்சித் தலைவர்களை அழைத்து, ஒரு கூட்டத் தினை தலைமைச் செயலகத்தில் கூட்டி, ஒருமனதாக மூன்று தீர்மானங்களை நிறைவேற்றி, சம்பந்தப்பட்டவர்களின் கவனத்தை நன்கு ஈர்த்துள்ளது என்பது காலமறிந்த கடமை உணர்வுக்கான செயல்பாட்டின் வெளிப்பாடு ஆகும்!*

### காவிரி நடுவர் மன்றம், உச்சநீதிமன்றத் தீர்ப்புகளைப் புறந்தள்ளுவதா?

*1. காவிரி நடுவர் மன்றம் 5.2.2007 அன்று அளித்த இறுதித் தீர்ப்பையும், மாண்பமை உச்சநீதிமன்றம் 16.2.2018 அன்று அளித்த தீர்ப்பையும் அவமதிக்கும் வகையில், காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு தற்போது ஆணையிட்டுள்ளவாறு தமிழ்நாட்டிற்கு காவிரி நீரைத் தர முடியாது என்று மறுத்துள்ள கருநாடக அரசிற்கு - இந்த அனைத்து சட்டமன்றக்கட்சிக் கூட்டம் தனது கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.*

*2. காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பு மற்றும் மாண்பமை உச்சநீதிமன்ற ஆணையின்படி, தமிழ்நாட்டிற்குக் காவிரி நீரை உடனடியாக விடுவித்திட கருநாடக அரசுக்கு ஆணையிடு மாறு காவிரி நதிநீர்மேலாண்மை ஆணையத்தினை இந்த அனைத்து சட்டமன்றக் கட்சிக் கூட்டம் வலியுறுத்துகிறது.*

*3. காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித்தீர்ப்பு மற்றும் மாண்பமை உச்சநீதிமன்ற ஆணையின்படி, தமிழ்நாடு பெறவேண்டிய நீரை உடனடியாகப் பெறுவதற்கு, தேவைப்படின், மாண்பமை உச்சநீதிமன்றத்தை நாடி, அனைத்து சட்டபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள இக்கூட்டம் ஒருமனதாக தீர்மானிக்கிறது.*

### கருநாடக அரசு நடந்துகொள்ளும் போக்கு நியாயமானதல்ல!

*- இந்த மூன்று முத்தாய்ப்பான தீர்மானங்கள், தற்போது தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு குறிப்பாக டெல்டா நீர்ப் பாசன விவசாயப் பெருமக்களுக்கு ஏற்பட்டிருக்கும் கடும் சோதனைகளையும், தற்போ துள்ள காவிரி ஒழுங்காற்றுக் குழுவின் முடிவுகள் எப்படி முந்தைய தீர்ப்புகள், தீர்வுகளுக்கு விரோதமான அவமதிப்பு என்பதையும், கருநாடக அரசின் முறையற்ற அரசியல் சண்டித்தனத்தின் கொடுமையையும், கண்டனம் செய்ததோடு, சட்டங்களுக்கு அப்பாற்பட்டு, மனிதநேயத்தை மறந்தோ, மறைத்தோ அல்லது மறுத்தோ நடந்துகொள்வது, கருநாடக அரசுக்கு நியாயமல்ல என்பதை யும் உணர்த்தியுள்ளது.*

*உச்சநீதிமன்றத்தின் ஆணை - தீர்ப்புகளை யும்*



*கூட லட்சியம் செய்யாத அவமதிப்பு ஆணவப் போக்கு அல்லவா?*

*மூன்றாவது தீர்மானப்படி உச்சநீதிமன்றத்தை அணுகுவதுதான் சரியான இறுதித் தீர்வு.*

*ஒரு டி.எம்.சி. தண்ணீர் தரவேண்டும் என்று காவிரி ஒழுங்காற்றுக் குழுவின் ஆணையேகூட நியாயமற்ற ஒரு சார்பு ஆணையாகவே பாதிக்கப்பட்ட பலருக்கும் தெரிகிறது.*

*கொதிக்கும் மனநிலை தமிழ்நாட்டு டெல்டா விவசாயிகளிடம் கட்சி வேறுபாடின்றி உள்ளது. காவிரி நீர்ப் பங்கீடு சலுகையோ, பிச்சையோ அல்ல - அரசமைப்புச் சட்டப்படி தமிழ்நாட்டிற்கும், புதுச்சேரிக்கும் உள்ள உரிமையாகும்.*

*ஒவ்வொரு முறையும் உச்சநீதிமன்றம் செல்லும் நிலையை காவிரி ஒழுங்காற்று ஆணையமும், கருநாடக அரசும் தவிர்த்திட முனையாமல் தங்கள் விருப்பம் போல் நடந்துகொள்வது எவ்வகையில் சரியானதாகும்?*

*தமிழ்நாடு அரசு கூட்டிய இந்த அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானத்தை விளக்கியும், மேலும் பயிர்கள் பாசனத்திற்கு டெல்டா பகுதி விவசாயிகள் உரிமை பாதிக்கப்படாமல், நிரந்தரமாகக் காப்பாற் றப்படும் வகையிலும் வருகிற 23.7.2024 செவ்வாய் மாலை தஞ்சையில் ஒரு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு அனைவருக்கும் அன்பழைப்பு விடுத்துள்ளோம்!*

*இந்தப் பிரச்சினையில், அரசியல் மாச்சரியங்களைத் தள்ளி, ஆளுங்கட்சி, எதிர்க் கட்சிகள் என்று பிரிந்திருக்காமல், கருநாடக மாநிலத்தில் உள்ள ஒற்றுமை - தண்ணீர் தர மறுத்து ஒரே குரலில் ஒலிக்கும் பிடிவாதக் குரல் - அழிச்சாட்டியம் காட்டும் நிலையில், நாம் மட்டும் "எல்லோரும் அங்கு தனித்தனிதான், ஒருமனதாகி அவர்கள் நம்மை எதிர்ப்பதெங்கே?" என்று கூறினால், அதைவிட கண்டிக்கத்தக்க, மக்கள் விரோதப் போக்கு வேறு இருக்குமா? என்று தமிழ்நாட்டுக் கட்சிகளும், தலைவர்களும் சிந்திக்க வேண்டும்.*

### கருநாடக துணை முதலமைச்சரின் அதிர்ச்சியான அறிவிப்பு!

*கருநாடக துணை முதலமைச்சர் கூறியதாக ஒரு செய்தி சில தொலைக்காட்சிகளில் கண்டோம்.*

*"மேகதாது அணை கட்ட தமிழ்நாடு ஒப்புதல் தந்தால் ஒழிய, தண்ணீர் தர முடியாது" என்று கூறியிருப்பதான செய்தி அது.*

*அச்செய்தி சரியாக இருப்பின், அதைவிட பெரும் அரசமைப்புச் சட்ட மீறல், சட்ட விரோத அறிவிப்பு வேறு என்னவாக இருக்கும்?*

*சர்வாதிகார, எதேச்சதிகாரத்திலிருந்து ஜனநாயகத்தை மீட்டெடுக்கத் தொடர்ந்து போராடும் இந்தியா கூட்டணியின் ஒற்றுமைக்கு உலைவைக்க இந்த காவிரிப் பிரச்சினையை முதலீடு ஆக்கிக் கொள்ளும் நப்பாசையோடு - தி.மு.க. வின் தொடர் வெற்றிகளைக் கண்டு அரண்டு போய் உள்ள அரைவேக்காடு அரசியல் தலைவர்களும், ஆரியமும் "சிண்டு முடியும்" வழமையான ஆயுதத்தையும் காட்ட முனைந்துள்ளனர். இதை அவர்கள் உணர்ந்து நடந்துகொள்ள வேண்டாமா?*

### உரிமைகளை வென்றெடுக்க ஒன்றிடுவோம்!

*அதையும் தமிழ்நாட்டு மக்களிடம் புரிய வைத்து, நம் உரிமைதனை கடித்த, கடிக்கும் ஆரியப் பாம்பின் படமெடுத்தாடலுக்கும் இடந்தராமல், நம் உரிமைகளை நாம் வென்றெடுக்க முனைய வேண்டும்!*

*எனவே, பல நோக்கு கவனப் பார்வையுடன் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவது அவசியம், அவசரம்!*

*இவ்வாறு கி.வீரமணி அவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.*

---



# 'சிலந்தி' பதில்கள்!



**கேள்வி:** விக்கிரவாண்டி இடைத்தேர்தல் முடிவு எதைக் காட்டுகிறது?

**பதில் :** **சாதிய அரசியலுக்குச் சம்மட்டி அடி!**

**சதிகார அரசியலுக்குச் சாவுமணி!**

**உண்மை, உழைப்புக்கு உத்வேகம்; உந்து சக்தி!**


**கேள்வி:** விக்கிரவாண்டி இடைத்தேர்தல் முடிவுக்குப் பின் மருத்துவர் அய்யா ராமதாஸ் மற்றும் அவரது மகன் அன்புமணி ஆகியோரின் நிலை என்ன?

**பதில்:** **இந்த முடிவை பெரிய அய்யாவும், சின்ன அய்யாவும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்; தோல்வியா அது; ஏமாற்று அரசியல் நடத்தி அடிக்கடி நிறம் மாறும் அரசியல்வாதிகளுக்கு மக்கள் தந்த மரண அடி! பெரிய அய்யாவுக்கும் சின்ன அய்யாவுக்கும் தோல்வியால்கூட பெரிய வருத்தம் இருந்திருக்காது; இந்த தோல்வியால் இனிவரும் தேர்தல்களில் பேரத்தை பெரிய அளவில் நடத்த முடியாதே என்ற கவலைதான் பெரிதாக இருந்திருக்கும். 'பேரம்' என்றதும் வேறு பொருள் கொண்டுவிடாதீர்கள். நாம் குறிப்பிடுவது அவர்களுக்கான 'சீட்' பேரத்தை தான்!**

**கேள்வி:** விக்கிரவாண்டி இடைத்தேர்தலிலிருந்து பல பாடங்களைக் கற்றுக் கொண்டதாக அன்புமணி (சின்ன அய்யா) கூறியுள்ளாரே?



**பதில்:** **'பலரை சில காலம் ஏமாற்றலாம்; சிலரை பல காலம் ஏமாற்றலாம்; ஆனால் எல்லாரையும் எல்லா காலமும் ஏமாற்ற முடியாது' - என்ற பாடம், அவர் கற்ற பல பாடங்களில் ஒன்றாக இருக்குமெனக் கருதுகிறோம்.**



**கேள்வி :** 'ஓ.பி.எஸ்., சசிகலா, தினகரனுக்கு தனது அ.தி.மு.க.வில் இடமில்லை' என திட்டவட்டமாக எடப்பாடி பழனிச்சாமி கூறிவிட்டாரே!

**பதில் :** **எடப்பாடி பழனிச்சாமி 'எத்தருக்கு எத்தர்' என்பதை பல கட்டங்களில் நிரூபித்தவராயிற்றே! கட்டுச் சோற்று மூட்டையில் பெருச்சாளிகளை வைத்துக் கட்டிக் கொள்ள அவர் ஏமாளியா; என்ன?**

**கேள்வி:** என்னுடைய 'என்ட்ரி' (Entry) ஆரம்பமாயிடுச்சி... இனிமே பார்க்குறதே வேற..., என்று கூறிய சசிகலா தனது 'என்ட்ரி'யை ஆரம்பித்துவிட்டாரே?



**பதில் :** **"கிளம்பிட்டாங்கய்யா... கிளம்பிட்டாங்க'ன்னு வடிவேலு ஒரு படத்தில் பேசிய வசனம்தான் இந்தப் புதிய 'கிளம்பல்'களைப் பார்க்கும்போது நமது நினைவில் நிழலாடுகிறது! ஓ.பி.எஸ்., ஈ.பி.எஸ். நடத்திய பல அரசியல் காமெடிகளைப் பார்த்துச் சலித்துப் போன தமிழ்நாட்டு மக்கள் இனிவரும் காலங்களில் புதிய காமெடிகளைக் காணலாம்! புரட்சித் தாயும், புரட்சித் தமிழரும் நடத்திடும் சரவெடிக் காமெடிகளுக்குப் பஞ்சம் இருக்காது!**

**கேள்வி:** ஆன்லைனில் மது விற்பனை செய்தால் போராட்டம் நடத்தப் போவதாக மருத்துவர் ராமதாஸ் கூறியுள்ளாரே!

**பதில்:** **மருத்துவர் அய்யா இப்போது கனவுலகிலே சஞ்சரித்துக் கொண்டிருக்கிறார் போலும்! 'அப்படி ஒரு திட்டம்; அதாவது ஆன்லைன் மது விற்கும் திட்டம் எதுவும் இல்லை' என டாஸ்மாக் நிர்வாகம் தெளிவாகத் தெரிவித்துவிட்டது! விக்கிரவாண்டி தேர்தல் படுதோல்விக்குப் பிறகு, தன்னோடு இருக்கும் கொஞ்ச நஞ்சத் தொண்டர்களைப் பாதுகாத்துக் கொள்ள, இல்லாத ஒன்றை இவரே சிருஷ்டித்துக் கொண்டு அதனை எதிர்த்து அறிக்கை விட்டு, இருப்பைக் காட்டிக் கொள்கிறாரோ; என்னவோ?**

**கேள்வி:** அரசியல் சட்டம் 370 வது பிரிவு நீக்கத்திற்குப் பிறகு, பிரதமர் மோடி கூறியபடி ஜம்மு - காஷ்மீரில் பயங்கரவாதம் தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டதா?

**பதில்:** **கடந்த ஜனவரி 1 ஆம் தேதியிலிருந்து இன்று வரை காஷ்மீரின் ஜம்மு பிராந்தியத்தில் நடந்த பயங்கரவாதத் தாக்குதல்களில் இராணுவ கேப்டன் உட்பட 12 பாதுகாப்புப் படையினரும் 10 பொதுமக்களும் பலியாகி உள்ளனர்.**



**இந்த ஜூலை மாதம் 7 ஆம் தேதி ராஜபுரி மாவட்டத்தில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலில் ஒரு போலீஸ்காரர் காயம் அடைந்துள்ளார். ஜூலை 8 ஆம் தேதி கதுவா மாவட்டத்தில் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 5 இராணுவ வீரர்கள் பலி ஆகி உள்ளனர். பலருக்குக் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. ஜூலை 15 ஆம் தேதி தோடா மாவட்டத்தில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் இராணுவ கேப்டன் உட்பட 4 இராணுவ வீரர்கள் பலி ஆகி உள்ளனர்!**

**370 வது பிரிவை நீக்கியபோது பிரதமர் மோடி என்ன பேசினார் என்பதை எண்ணிப்பாருங்கள்! 'காஷ்மீர், பயங்கரவாத சக்திகளிடமிருந்து மீட்டெடுக்கப்படும்; அமைதிப் பூங்காவாக மிளிரும்' என்றும், 'மீண்டும் அங்கே திரைப்படப்பிடிப்புகள் தொடங்கும்.' - 'இது மோடியின் உத்தரவாதம்' என்றெல்லாம் முழங்கினார்.**

**இப்போதும் அங்கே பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்கதைகளாகின்றன. நமது இராணுவ கேப்டன் உட்பட பல வீரர்கள், அப்பாவி மக்கள் பலியாகியுள்ளனர்.**

**மணிப்பூர் பற்றி எரிந்துகொண்டிருக்கிறது. ஜம்மு - காஷ்மீரில் பயங்கரவாதத் தாக்குதல்களால் பதட்டநிலை - நடுக்கத்தில் நாட்டின் எல்லைப் பகுதிகள் உள்ளன. இந்த நிலையில் பிரதமரோ மூன்றாவது முறை பதவி ஏற்றபின் இந்தக் குறுகிய காலத்தில் மூன்று நாடுகளுக்குச் சென்று வந்துவிட்டார்... கவலையில்லா மனிதர்!**